**மாத்தளை மாவட்டத்தின் 23 கமநல சேவை செயற்குழுக்கள் - 2024**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** மாத்தளை மாவட்டத்தின் 23 கமநல சேவை செயற்குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயலாற்றுகை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுடன் தொடர்புடைய தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்குரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது மற்றும் 2000 இன் 46 இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** மாத்தளை மாவட்டத்தின் 23 கமநல சேவை செயற்குழுக்கள் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட 23 கணக்காய்வு அறிக்கைகளில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டுள்ளதுடன், முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கு காரணமாகியிருந்த பொருண்மையான தவறுகள் கீழ் காண்பிக்கப்படகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்.

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உள்ளடங்களாக கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்காமைகள்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 2 ஆம் பந்தி பிரகாரம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்ய வேண்டிய போதும், 09 கமநல சேவை செயற்குழுகளின் ஏக்கர் வரி வருமானம் மற்றும் வாலவெல கமநல சேவை செயற்குழுவின் நிலையான வைப்பு வட்டி வருமானம் காசு அடிப்படையின் மீது கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் கணக்கு அறிக்கைகளை தயாரிக்கும் போது ஏக்கர் வரி வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானத்தை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்வதென. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்கு வைக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07, ஆதன பொறிகள் மற்றும் உபகரண நியமத்தின் 86 பந்தியின் (இ) பிரிவின் பிரகாரம் பயன்படத்திய பெறுமானத் தேய்வு விகித்தை காண்பிக்க வேண்டிய போதும் 09 கமநல சேவை செயற்குழுகளின் பெறுமானத் தேய்வு விகிதத்தை போன்றே பெறுமானத் தேய்வு கொள்கையையும் சரியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதென. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் பெறுமானத் தேய்வு கொள்கை மற்றும் பெறுமானத் தேய்வு விகித்தை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |
| (இ) | 1981 ஒக்டோபர் 16 ஆம் திகதிய 107 ஆம் இலக்க கமநல சேவை ஆணையாளரின் சுற்றறிக்கையின் 30(4) | எதிர்வரும் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுத்து |

| | | |
|---|---|---|
| பந்திக்கு முரணாக 05 கமநல சேவை செயற்குழுகளின் கட்டிடங்கள் குறைந்து செல்லும் மீதி முறையின் மீது பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது. | எடுப்பதென. | சரியாக பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டும். |

**1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 09 கமநல சேவை செயற்குழுகளின் மூலம் கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்யும் போது மென்பொருள், கமநல வங்கிக் கணக்கு மென்பொருள் மற்றும் அந்த மென்பொருளிற்குரிய உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 319,183 ஆன செலவினை மேற்கொண்டிருந்த போதும் மீளாய்வாண்டு முடிவடைந்து 03 மாதங்கள் முதல் 05 மாதங்கள் செல்லும் வரை அந்த சொத்துக்கள் செயற்குழுக்களிற்கு கிடைத்திருக்காத போதும் அந்த செலவுகளை நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரத்தொட்ட மற்றும் ஹதுன்கமுவ கமநல சேவை செயற்குழுகளில் கிடைக்க வேண்டிய சொத்துக்களின் கீழ் கூட்டுத் தொகை ரூபா 34,262 ஆன கமநல வங்கி மென்பொருள் பெறுமதி குறிப்பிட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளரின் அறிவுரையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | சொத்துக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியதுடன் குறித்த சொத்துக்களை விரைவில் அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 03 செயற்குழுக்களில் கூட்டுத் தொகை ரூபா 133,220 ஆன நடைமுறையல்லாத சொத்துக்களை கொள்வனவு செய்த செலவை மீளாய்வாண்டிற்குரிய செலவாக நிதிக்கூற்றுக்களில் இனங்கண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | செலவினத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியதுடன், குறித்த சீராக்கங்களை நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | அலுகொல்ல கமநல சேவை செயற்குழுவினால் மீளாய்வாண்டிற்காக நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 14,570 குறைவாக மற்றும் துபுள்ள கமநல சேவை செயற்குழுவினால் வருடாந்த நிலையான வைப்பு வட்டி வருமானத்தை ரூபா 857,798 இனால் கூடுதலாக கணக்கீடு செய்திருந்ததுடன் 02 செயற்குழுக்களினால் கூட்டுத் தொகை ரூபா 401,657 பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் நிதிக்கூற்றுகளில் இனங்கண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | கணக்கீடு குறைகளை சரிசெய்ய வேண்டியதுடன், கணக்கீட்டு உள்ளக கட்டுப்பாட்டை வலுப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 07 செயற்குழுக்களினால் பெறுமதி ரூபா 8,766,838 ஆன காலாவதியான 05 வகை இருப்புக்களை நிதி நிலைமை கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | பராதீனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதெ ன. | இருப்பு மீதியை சரியாக சீராக்கி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். |
| (உ) | எல்கடுவ மற்றும் பலாபத்வல கமநல சேவை செயற்குழுக்களினால் 02 வருமான உருப்படிகளிற்குரியதாக கூட்டுத் தொகை ரூபா 15,270 இனை நிதி மற்றும் செயலாற்றுகை கூற்றுக்களில் குறைத்து எடுத்திருந்ததுடன் 03 கமநல சேவை செயற்குழுக்களினால் 03 செலவு விடயங்களிற்குரியதாக ரூபா 697,856 தொகையை நிதி செயலாற்றுகை கூற்றுடன் இணக்கியிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | செயற்குழு வருமானம் மற்றும் செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியதுடன் குறித்த சீராக்கத்தை நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ள வேண்டும். |
| (ஊ) | 03 கமநல சேவை செயற்குழுக்களில் கடந்த ஆண்டிற்குரியதாக ரூபா 104,609 ஆன செலவினை மீளாய்வாண்டின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | ஆண்டிற்குரிய செலவினை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியதுடன் கணக்கீட்டு செயன்முறையை வலுப்படுத்த வேண்டும். |
| (எ) | 09 செயற்குழுக்களினால் கூட்டுத் தொகை ரூபா 18,734,122 ஆன நடைமுறையல்லாத சொத்துக்களை நிதி நிலைமை கூற்றில் இனங்கண்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | நடைமுறையல்லாத சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்து நிதிக்கூற்று பெறுமதிகளை சரிசெய்ய வேண்டும். |
| (ஏ) | ஹத்தொடஅமுன கமநல சேவை செயற்குழுவினால் கட்டிடப் பெறுமதி ரூபா 215,710 இனால் கூடுதலாக நிதி நிலைமை கூற்றில் காட்டியிருந்ததுடன் திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 474,214 இனால் குறைத்து காட்டப்பட்டு இருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | கணக்கீட்டு குறைபாட்டை சரிசெய்து நிதிக்கூற்றுக்களிற்கு சீராக்க வேண்டும். |
| (ஐ) | கிபிஸ்ஸ கமநல சேவை செயற்குழுவினால் வயல் காணி மீட்புக் கட்டண வருமானம் ரூபா 174,800 தொகை கூடுதலாக நிதி செயலாற்றல் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |
| (ஒ) | பலாபத்வல கமநல சேவை செயற்குழுவினால் மாதளை மாவட்டத்தில் 12 கமநல சேவை செயற்குழுக்களில் இருந்து கிடைக்க வேண்டிய குழுக் கடனாக ரூபா 135,817 ஆன மீதியை நடைமுறை சொத்துக்களின் கீழ் | கமநல சேவை செயற்குழு கணக்கு அறிக்கைகளிற்கு உரிய தகவல்கள் தொடர்பான விடயங்களை | குறித்த செயற்குழுவை வினவி மீதிகளை உறுதி செய்து கொண்டு நிதிக்கூற்றுக்களை சீராக்கிக் கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | காண்பித்திருந்த போதும் அந்த செயற்குழு கணக்கு அறிக்கைகளில் அவ்வாறான செலுத்த வேண்டிய மீதிகள் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. | காண்பிக்க முடியாதென. | வேண்டும். |
| (ஓ) | தென்ன கமநல சேவை செயற்குழு அமைந்துள்ள 01 ஏக்கர் அளவான காணியை ரூபா 3,000 ஆன வரலாற்று சிறப்புமிக்க கிரயத்தில் கணக்கீடு செய்திருந்ததுடன் இந்த காணியை மதிப்பீடு செய்து சரியான பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை. | காணி மதிப்பீடு செய்ய திணைக்களத்தினால் அறிவுரை வழங்கப்படவில்லையென. | சரியான பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் வகையில் காணிகளை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஔ) | வாலவெல கமநல சேவை செயற்குழுவினால் ரூபா 687,784 ஆன பெறவேண்டிய பங்கிலாபத்தை நிதிநிலைமை கூற்றில் காண்பித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | கணக்கீட்டு குறைபாட்டை சரிசெய்து சரியான பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களிற்கு சீராக்க வேண்டும். |

### 1.3.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரிய 04 சொத்து விடயங்களில், 03 பொறுப்பு விடயங்களில் மற்றும் செலவின விடயமொன்றிற்குரியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகள், நேரொத்த அறிக்கையுடன் ஒப்பிடும் போது கூட்டுத்தொகை ரூபா 1,864,484 இணக்கமின்மை நிலவியது. | சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதென. | கணக்கு மீதிகளை நேரொத்த அறிக்கையுடன் ஒப்பீட்டு இணக்கமின்மையை இனங்கண்டு கணக்கு மீதிகளை சரி செய்ய வேண்டும். |
| (ஆ) | 03 கமநல சேவை செயற்குழுக்களில் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் காண்பிக்கப்பட்டுள்ள கமநல வங்கியிலிருந்து வருடாந்தம் பெற வேண்டியப பங்கிலாப பெறுமதி, கமநல வங்கி நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பீடும் போது கூட்டுத் தொகை ரூபா 699,788 ஆன இணக்கமின்மை நிலவியது. | சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதென. | கமநல வங்கி நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிட்டு இணக்கமின்மையை இனங்கண்டு கணக்கு மீதிகளை சரி செய்ய வேண்டும். |

### 1.3.4 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 12 கமநல சேவை செயற்குழுக்களில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கபப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 5,373,183 ஆன 26 சொத்து விடயங்களில் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 8,692,251 ஆன 36 பொறுப்பு விடயங்களிற்குரியதாக | கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரை அறிவுருத்தியுள்ளதென. | கணக்கு மீதிகள் தொடர்பாக அனைத்து உறுதிபாடுகளையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அட்டவணை, மீதி உறுதிப்பாட்டு ஆவணங்கள் மற்றும் கோவைகள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | | |
| (ஆ) | தேவஹுவ கமநல சேவை செயற்குழுவினால் கூட்டுத்தொகை ரூபா 771,988 ஆன பீடைகொல்லி திரவத்திற்காக பெற வேண்டிய தொகை மற்றும் பெற வேண்டிய விவசாய அமைச்சு பசளை தொகையை மீளாய்வாண்டில் திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கியுள்ளதுடன் அதற்காக அங்கீகாரம் பெற்ற கடிதங்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன் பிரதி ஆணையாளரின் அறிவுரை மீது முன் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதெ ன. | நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கல் மேற்கொள்ளவதற்கு அடிப்படையான மூல ஆவணங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (இ) | லக்கல பல்லேகம கமநல சேவை செயற்குழுவினால் விற்பனை செய்து பணம் செலுத்தும் அடிப்படையின் கீழ் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி அலுவலர்களிற்கு விநியோகிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் பணக் கிடைப்பனவு, பேரேட்டை சமப்படுத்தி இல்லாததனால் 05 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி அலுவலர்களின் கடன்படுனர் மீதி ரூபா 839,029 தொகையை நிதிக்கூற்றுக்களுடன் சரியாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | பதிவேடுகளை சரியாக பேணிச்ச செல்ல நடவடிக்கை எடுப்பதென. | பேரேட்டுக் கணக்குகளை சரியாக சமப்படுத்தி கணக்கு மீதிகள் தொடர்பான அனைத்து உறுதிபாடுகளையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஈ) | ஹெட்டிபொல கமநல சேவை செயற்குழுவினால் 2020 ஆண்டிற்குரியதாக விவசாய பொருட்கள் இருப்பு பொறுப்பாளர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டியதாக காணப்படும் இருப்பு பற்றாக்குறை பெறுமதியாக ரூபா 162,500 ஆன மீதியொன்று நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் இந்த பற்றாக்குறையை உறுதி செய்து கொள்வதற்குரியதாக முறையான விசாரணையொன்றை மேற்கொண்டதாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | குறித்த தொகையை செலுத்துமாறு அலுவலரை எழுத்து மூலம் அறிவுருத்தியுள்ளதெ ன. | கணக்கு மீதி தொடர்பாக அனைத்து உறுதிப்பாடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம் | | | |
| | 15 (3) பிரிவு மற்றும் 1998 மே 27 ஆம் திகதிய 322 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாகத்தின் சுற்றறிக்கை | யுட்டவத்த, கோன்கஹவெல மற்றும் கலேவெல கமநல சேவை செயற்குழுக்களினால் கூட்டுத்தொகை ரூபா 250,154 ஆன காணி மரபு உரிமை தொகை தீர்க்கப்படாது மீளாய்வாண்டு இறுதி வரையும் செயற்குழு கணக்கினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் யட்டவத்த கமநல சேவை செயற்குழுவினால் கூட்டுத்தொகை ரூபா 33,441 ஆன குத்தகை மரபு உரிமை தொகை குறித்த தரப்பினரிற்கு செலுத்தப்படாது செயற்குழு கணக்கில் நிறுத்தி வைத்திருந்தது. | விவசாயிகள் அறிவூட்டப்பட்டதாகவும் அவர்கள் முன்வராது இருப்பின் கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரின் அறிவுரையின் படி எதிர்காலத்தில் விவசாயிகளினது பொறுப்பு நிதியத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுப்பதென. | சுட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மீதியை தீர்க்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| i. | நிதிப்பிரமாணம் 110 | 10 கமநல சேவை செயற்குழுக்களினால் சேதங்கள் நட்டங்கள் பதிவேடொன்றை பேணிச் சென்று இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சேத நட்ட பதிவேடொன்று பேணிச் செல்லப்படுவத என. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பதிவேடுகளை பெணிச் செல்லவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | நிதிப்பிரமாணம் 237 (ஆ) | மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரீட்சிப்பின் பிரகாரம் லக்கல பல்லேகம் கமநல சேவை செயற்குழுவினால் 12 சந்தர்ப்பங்களில் ரூபா 2,258,979 பெறுமதியான கொள்வனவு தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் வவுசர்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏனைய ஆவணங்களை சமர்ப்பித்திருக்கவில்லை. | ஏதிர்காலத்தில் குறித்த பதிவேடுகள், இருப்பு புத்தகங்கள் மற்றும் குறித்த குறைபாடுகளுடன் சரி செய்வதென. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கொடுப்பனவு வவுசர்களுடன் ஏனைய துணை ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். |
| iii. | நிதிப்பிரமாணம் 264 (1) | அனைத்து கொடுப்பனவிற்காகவும் வவுசரில் குறிப்பிட்ட மொத்த தொகை கிடைத்தமையை பெறுனரினால் உறுதி செய்ய வேண்டிய போதும் ஹத்தொட்ட அமுன கமநல சேவை செயற்குழுவினால் கூட்டுத்தொகை ரூபா 372,300 பெறுமதியுடன் கூடிய 04 வவுசரகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக பெறுனரினால் உறுதி செய்துகொள்ள தேவையான நடவடிக்கை எடுப்பதென. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| iv. | நி.பி 315 | 05 கமநல சேவை செயற்குழுவினால் வழியில் காசு தொடர்பாக காப்புறுதிக் காப்பொன்றை பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | ஏதிர்காலத்தில் வழியில் காசு காப்புறுதிக் காப்பொன்றை பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கை மேற்கெள்ளப்படுவதென. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வழியில் காசிற்காக காப்புறுதிக் காப்பொன்றை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| v. | நிதிப்பிரமாணம் 316 | அரசின் அனைத்து பணங்களையும் சேப்பில், பாதுகாப்பு பெட்டியொன்றில் அல்லது பாதுகாப்பு அறையொன்று போன்ற பாதகாப்பு உள்ள இடமொன்றில் வைக்க வேண்டிய போதும் ஹத்தெட்டஅமுன கமநல சேவை செயற்குழுவிற்கு சொந்தமாக அவ்வாறான பாதுகாப்பான சேப்பொன்று இருக்கவில்லை. | பாதுகாப்பு சேப்பொன்றை பேணிச்செல்ல நடவடிக்கை எடுப்பதென. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| vi. | நிதிப்பிரமாணம் 502 (2) மற்றும் 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | 05 கமநல சேவை செயற்குழுக்களில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை பேணிச் சென்றிருக்கவில்லை. | ஏதிர்காலத்தில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை பேணிச் செல்ல நடவடிக்கை எடுப்பதெனை. | குறித்த பதிவேடுகளை பேணிச் செல்லாத அலுவலர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கும், நிதிப்பிரமாணம் பிரகாரம் செயற்பட்டு அந்த பதிவேடுகளை பேணிச் செல்லவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| vii. | நிதிப்பிரமாணம் 880 பிரகாரம் மற்றும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2020 ஜுன் 25 ஆம் திகதிய 8/2020 இலக்க சுற்றறிக்கை | காசு மற்றும் இருப்பு தொடர்பாக செயற்படுவதற்காக அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களினால் பிணை வைக்க வேண்டிய போதும், 06 கமநல சேவை செயற்குழுக்களில் உத்தியோகத்தர்கள் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அலுவலரை அறிவுருத்தி பிணை வைக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்தெனை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து விரைவில் பிணை வைப்பு செய்ய வேண்டும் |
| viii. | நிதிப்பிரமாணம் 890 (i) | 04 கமநல சேவை செயற்குழுக்களில் பிணை வைப்பு பதிவேடொன்றை பேணிச் சென்றிருக்கவில்லைை. | எதிர்காலத்தில் பிணை வைப்பு பதிவேடொன்றை பேணிச் செல்ல நடவடிக்கை எடுப்தெனை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறித்த பதிவேட்டை பேணிக் கொள்ள வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4 பந்தி | அரசிற்கு குறைந்தபட்ட தீங்கு ஏற்படும் வகையில் நிறுவனம் பொருத்தமான பெறுகைகள் முறையை பின்பற்றி கொள்வனவை மேற்கொள்ள வேண்டிய போதும், உக்குவெல கமநல சேவை செயற்குழுவினால் விலைமனு கோராமல் பசளை, விவசாய இரசாயன மற்றும் விவசாய பொருட்களை கொள்வனவு செய்திருந்தது. மேலும் நீர் தாங்கி, பாதுகாப்பு மின்சார வேலிக்காக வழங்குனர்களை தெரிவு செய்திருந்ததும் ஏனைய கொள்வனவுகளிற்காகவும் | சரியாக கருத்து தெரிவித்திருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு செயற்படாத தரப்பினரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அவ்வாறு வழங்குனர்களை பதிவு செய்திருக்கவில்லை. | | |
| (ஈ) | 2009 ஏப்ரல் 16 திகதிய இலக்கம் 09/2009 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | 16 கமநல சேவை செயற்குழுக்களில் உத்தியோகத்தர்களின் வரவு மற்றும் வெளிச் செல்லலை பதிவு செய்வதற்காக விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்தியிருக்காததுடன் 17 கமநல சேவை செயற்குழுக்களில் வரவு மற்றும் வெளிச் செல்லலை பரீட்சிப்பதற்காக விரல் அடையாள இயந்திரத்தின் அச்சுப் பிரதிகளை பெற்றிருக்கவில்லை. | விரல் அடையாள இயந்திரங்கள் உரியவாறு செயற்படாததால் திருத்த வேலைகளிற்காக அனுப்பியுள்ளதாக வும் அச்சுப் பிரதியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு செயற்படாத தரப்பினரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | கமநல சேவை ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| i. | 1981 ஒக்டோபர் 16 திகதிய இலக்கம் 107 கொண்ட சுற்றறிக்கையின் 17 பிரிவின் 3 (அ) பந்தி | அலுகொல்ல மற்றும் லக்கல பல்ளேகம கமநல சேவை செயற்குழுக்களினால் கமநல சேவை செயற்குழுவின் தவிசாளரின் அங்கீகாரமின்றி 22 சந்தர்ப்பங்களில் பெறுமதி ரூபா 247,179 ஆன கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தன. | எதிர்காலத்தில் கைத்தவறுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதற்கு மாற்றமாக செயற்பட்ட தரப்பினரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. | 1981 ஒக்டோபர் 16 திகதிய இலக்கம் 107 கொண்ட சுற்றறிக்கையின் 21 (2) பந்தி | இருப்பு பதிவேட்டை குறைந்த பட்சம் இரண்டு வராத்திற்கு ஒரு முறையாவது நிறைவேற்று செயலாளரினால் பரீட்சித்து மீதி சரியென கையொப்பமிட வேண்டிய போதும் பல்ளேபொல கமநல சேவை செயற்குழுவினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் இருப்பு புத்தகங்களை பரீட்சித்து கையொப்பம் இடுவதென. | -மேற்படி- |
| iii. | 1986 ஒக்டோபர் 21 திகதிய | 03 கமநல சேவை செயற்குழுக்களினால் மீளாய்வாண்டு இறுதி | நிறுவனத்தை அறிவுறுத்தியுள்ளதுடன் | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்கம் 264 கொண்ட சுற்றறிக்கையின் 01 பந்தி | திகதிக்கு ரூபா 104,689 ஆன அறை வாடகையை அறவிட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதென. | வேண்டியதுடன் காலரீதியாக வாடகை அறவிடாத உத்தியோகத்தரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iv. | 2000 ஜுன் 06 திகதிய இலக்கம் 518/2000 கொண்ட சுற்றறிக்கையின் 03 பந்தி மற்றும் 2012 பெப்ரவரி 29 திகதிய இலக்கம் 04/2012 கொண்ட கமநல வங்கி (முன்மாதிரி) செயற்திட்ட சுற்றறிக்கையின் 5.6 (i) பந்தி பிரகாரம் | 2024 ஆண்டில் 23 கமநல வங்கிகளின் நிதிக்கூற்றுக்கள் கமநல சேவை செயற்குழுக்களில் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு இருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அறிவுரை பிரகாரம் கணக்கறிக்கை தயாரித்துள்ளதென . | கமநல அபிவிருத்தி திணைக்களத்திடம் விரைவில் அறிவுரை பெற்று சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| v. | 2011 பெப்ரவரி 01 திகதிய இலக்கம் 7/5/1 கொண்ட சுற்றறிக்கையின் 05 பந்தி | அடியதழ் புத்தகங்களை மீண்டும் விநியோகிக்க வேண்டியது ஆரம்பத்தில் ஒப்படைத்த புத்தகத்தை மீண்டும் பொறுப்பேற்ற பின்னரான போதும், 05 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக 17 உத்தியோகத்தர்களிற்காக ஒரே பிரிவிற்கு உரியதாக முன்னர் விநியோகித்த ஏக்கர் வரி பற்றுச் சீட்டு புத்தகங்களை திருப்பி பொறுப்பேற்காது மீண்டும் விநியோகிக்கப்பட்டு இருந்தது. | விரைவில் திருப்பி அடியிதழ் புத்தகங்களை பொறுப்பேற்க நடவடிக்கை எடுப்பதென. | ஒழுங்கான விசாரணை ஒன்றை மேற்கொண்டு முறையற்றவாறு செயற்பட்ட உத்தியோகத்தரிற்கு நடவடிக்கை எடுக்கவும், சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிதி துஸ்பிரயோகம் இடம்பெறுவதனை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| vi. | 2013 மார்ச் 08 திகதிய இலக்கம் 04/2013 கொண்ட சுற்றறிக்கை | 04 கமநல சேவை செயற்குழுக்களில் கமநல சேவை நிலைய வளவை பயன்படுத்தி கமநல உற்பத்தி விற்பனை, தற்காலிக சிற்றுண்டிச்சாலை நடாத்துதல் மற்றும் கமநல அமைப்புக்களின் விவசாய உற்பத்திகளை கமநல சேவை நிலையங்களில் விற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டிருக்கவில்லை. | நிதிஏற்பாடு கிடைத்த பின்னர் விற்பனை கூடங்களை நிர்மாணிக்க நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். |
| vii. | 2016 பெப்ரவரி 09 திகதிய இலக்கம் 2016/03 கொண்ட சுற்றறிக்கையின் 02 பந்தி | விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர் ஒருவரினால் குறைந்தபட்சம் 04 மாதங்களிற்கு ஒரு முறையேனும் கமநல அமைப்புக்களை பரீட்சித்து கமநல பரீட்சிப்பு அறிக்கையை பிரதேச கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரிற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் 04 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகளை சரிசெய்து கொள்ளவதாகவும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு செய்யாத உத்தியோகத்தரிற்கு ஒழுங்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| viii. | 2022 திசெம்பர் 21 திகதிய இலக்கம் 7/5/3 வி/ப/செ சுற்றறிக்கையின் 04 (II) பந்தி | 04 கமநல சேவை செயற்குழுக்களின் மூலம் விற்பனை செய்து பணம் செலுத்தும் அடிப்படையின் மீது விவசாய பொருட்களை கடனிற்கு வழங்கி அந்த கடன் தொகையை 06 மாத காலத்தினுள் அறவிட வேண்டிய போதும் பெறுமதி ரூபா 456,940 ஆன கடன் மீதியை 2025 மே 30 ஆம் திகதி வரை செலுத்தி தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் காலரீதியாக பணத்தை அறவிடாத உத்தியோகத்தரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ix. | 2022 திசெம்பர் 28 | கமநல வங்கி முன்மாதிரி செயற்திட்டமொன்றில் | பி.ப. 3.00 இன் பின்னர் வங்கி | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | திகதிய இலக்கம் 04/2012 (திருத்திய vii) சுற்றறிக்கை | வைத்திருக்க வேண்டிய கையிறுப்பு காசின் உச்ச எல்லை ரூபா 50,000 ஆன போதும் வாலவெல கமநல சேவை செயற்குழுவினால் 42 சந்தர்ப்பங்களில் ரூபா 54,650 முதல் ரூபா 110,253 ஆன வீச்சளவு வரை காசு கையிறுப்பில் வைத்திருந்ததுடன் தேவஹுவ மற்றும் ஹன்தொட்டஅமுன கமநல சேவை செயற்குழு வங்கிகளில் 24 சந்தர்ப்பங்களில் ரூபா 52,299 முதல் ரூபா 184,271 வரை கையிறுப்பில் வைக்கப்பட்டிருந்தது. | கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுவதாகவும் அடுத்த நாள் பணம் வங்கியிலில் இடப்படுவதென. | நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் குறித்த மேற்பார்வை உத்தியோகத்தரின் மேற்பார்வையை அதிகப்படுத்த வேண்டும். |
| x. | 2023 ஏப்ரல் 24 திகதிய இலக்கம் 01/2023 கொண்ட சுற்றறிக்கையின் 07 பந்தி | ஒவ்வொறு காலாண்டு முடிவிலும் இடர் கடன் மேவுகை கணக்கில் திரண்ட நிதியை இடர் திதிய நிலையான வைப்பு கணக்கில் வைப்புச் செய்ய வேண்டிய போதும் பல்லேபொல வேரகல கமநல வங்கிகளினால் 2024 ஆண்டில் நிலையான வைப்புக் கணக்கொன்றை திறந்து ஒரு முறை மாத்திரம் வைப்புச் செய்திருந்ததுடன் இடர் நிதியத்தில் சேமிப்பு கணக்கு மீதி ரூபா 196,649 ஆக காணப்பட்டது. | ஒவ்வொறு காலாண்டு முடிவிலும் நிலையான வைப்பு கணக்கொன்றை திறக்க நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு செய்யாத உத்தியோகத்தரிற்கு முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| xi. | 2023 ஏப்ரல் 26 திகதிய இலக்கம் 7/5/9/05 கொண்ட சுற்றறிக்கையின் (செயற.நூ) I பகுதி (2) (i) பந்தி | 13 கமநல சேவை செயற்குழுக்களினால் சிறு செலவு காசு முறையை செயற்படுத்தி இருக்கவில்லை. | சிறு செலவு காசு முறையை எதிர்காலத்தில் செயற்படுத்துவதென. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| xii. | 2023 திசெம்பர் 11 திகதிய இலக்கம் 12/2018 (திருத்திய I) கொண்ட சுற்றறிக்கையின் 02 (i) பந்தி | கமநல சேவை செயற்குழு/ கமநல வங்கி கணக்குகளிலிருந்து பணத்தை மீள் பெறும் போது மற்றும் மீண்டும் விற்பனை செய்யும் அடிப்படையில் குழுவிற்கு கொள்வனவு செய்யும் பொருட்களிற்காக கொடுப்பனவு செய்யும் எல்லை ரூபா 200,000 தொகையை விஞ்சும் போது கமநல அபிவிருத்தி பிரதி/ உதவி ஆணையாளரினால் காசோலை துணை கையொப்பமிட வேண்டுமென, குறிப்பிடப்பட்டுள்ள போதும் வாசலகோட்டே கமநல சேவை செயற்குழுவினால் மீளாய்வாண்டில் 02 சந்தர்ப்பங்களில் ரூபா 472,000 தொகை செலுத்துவதற்காக உதவி ஆணையாளரின் துணை கையொப்பத்தை பெற்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் இடம்பெறாதவாறு நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு செய்யாத உத்தியோகத்தரிற்கு முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

மாத்தளை மாவட்டத்தின் 17 கமநல சேவை செயற்குழுக்களின் மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுத்தொகை ரூபா 17,351,924 மிகையொன்று மற்றும் 06 செயற்குழுக்களின் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுத்தொகை ரூபா 1,713,446 பற்றாக்குறையானதுடன், அதற்கு நேரொத்த 19 செயற்குழுக்களின் முன்னைய ஆண்டில் ரூபா 23,298,179 மிகையொன்றும் 04 செயற்குழுக்களின் ரூபா. 725,470 ஆன பற்றாக்குறையொன்றாகவும் இருந்தது. அதன் பிரகாரம் 12 செயற்குழுக்களிற்குரிய நிதி விளைவுகளில் ரூபா 5,450,096 ஆன வளர்ச்சியும் 11 செயற்குழுக்களிற்குரியதாக நிதி விளைவுகளில் ரூபா 10,820,871 ஆன வீழ்ச்சியும் அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிகளுக்கு ஏக்கர் வரி வருமானம் மற்றும் சேவை வழங்கும் வருமானம் அதிகரித்ததமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய் அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 11 கமநல சேவை செயற்குழுக்களுக்கு உரியதாக 2023 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரையான கால பகுதிக்குரியதாக கூட்டுத் தொகை ரூபா 344,120 ஆன | 2025 ஆண்டில் செலுத்தி முடிவுறுத்துவதென. | விரைவில் நடவடிக்கை எடுத்து செலுத்த வேண்டிய மீதியை தீர்க்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவை கணக்காய்வு கட்டணத்தை செலுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | | |
| (ஆ) | 10 கமநல சேவை செயற்குழுக்களுக்குரியதாக நீண்ட காலமாக நிலவி வரும் கூட்டுத்தொகை ரூபா 7,564,976 ஆன பெற வேண்டிய 40 கணக்கு மீதிகள் மற்றும் ரூபா 32,153,612 ஆன செலுத்த வேண்டிய 65 கணக்கு மீதிகளை மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | எதிர்காலத்தில் தீர்ப்பு செய்யப்படுவதென. | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை விரைவில் தீர்த்துக் கொள்ள வேண்டியதுடன் அவற்றை காலரீதியாக தீர்க்காத அலுவலர்களிற்கு நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (இ) | 04 கமநல சேவை செயற்குழுக்களிற்கு சொந்தமான காணிகளை சுவீகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கமநல சேவை செயற் குழுவிற்கு சொந்தமான காணிகளை சுவீகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்வதென. | காணிகளின் உரித்தை சுவீகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | தேவஹுவ கமநல சேவை செயற்குழுவின் சேமிப்பு கணக்கு மீதி மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 1,226,812 தொகை மற்றும் கணக்காய்வு திகதியில் அந்த தொகை ரூபா 1,264,190 தொகையானதுடன் இத்தொகையை அதிக நலங்கள் பெற்றுக்கொள்ள முடியுமானவாறு முறையான அங்கீகாரத்தின் கீழ் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | 2017 ஆண்டு முதல் காணப்படும் செலுத்த வேண்டிய மீதிகளுக்குரிய தொகையொன்றாகுமென. | செயற்படு மூலதன தேவைபாட்டை சரியாக இனங்கண்டு மிகை தொகையை முறையான அங்கீகாரத்தின் கீழ் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்ய வேண்டும். |
| (உ) | கலேவெல கமநல சேவை செயற்குழுவினால் 2025 பெப்ரவரி 19 ஆம் திகதி உலக உணவு நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் கமநல சேவை செயற்குழுவிற்கு கிடைத்த MOP நிவாரண பசளை 17179 கிலோ கிராம் மீளாய்வாண்டு இறுதி வரையும் பௌதீக ரீதியாக காணப்பட்டதுடன் கமநல சேவை அதிகார பிரதேசத்திற்கு தேவையான பசளை அளவு தொடர்பாக கவனிக்காது இந்த பசளையை பெற்றுக் கொள்வதன் காரணத்தால் பாரிய பசளை அளவொன்று பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பயிர்செய்யும் காணி அளவை சரியாக இனங்கண்டு பசளையை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் முறையான வேலைத்திட்டமொன்றின் கீழ் இந்த பசளையை பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 05 கமநல சேவை செயற்குழுக்களில் கூட்டுப் பெறுமதி ரூபா 854,561 ஆன யூரியா 1960 கிலோகிராமும் இயற்கை பசளை 1691 கிலோகிராமும் விவசாயி இரசாயன இருப்பு மற்றும் 305 விதை பக்கெட்டுகளும் 03 கமநல சேவை செயற்குழுக்களில் இலவசமாக விநியோகிப்பதற்காக வழங்கியிருந்த MOP பசளை 250 கிலோகிராம் TSP பசளை கிலோ கிராம் 818 காலாவதியாகி இருந்தது | விதை பக்கெட்டுகளை உரிய நிறுவனத்திற்கு ஏற்குமாறு அறிவித்துள்ளதென மற்றும் நிவாரண பசளையை கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரின் ஆலோசனையை பெற்றுக்கொண்டு முன் நடவடிக்கை எடுப்பதென. | சரியாக இருப்பு தேவைபாட்டை இனங்கண்டு இருப்பு முகாமைத்துவத்தை மேற்கொள்ள வேண்டியதுடன் இருப்பு தொடர்பாக முறையானவாறு செயற்படாத தரப்பினர்களிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | கோன்கஹவெல கமநல சேவை செயற்குழுவினால் கடந்த ஆண்டில் கொள்வனவு செய்திருந்த சோளப் பசளை 1790 கிலோகிராமிலிருந்து மீளாய்வாண்டு இறுதி வரை பசலை 50 கிலோகிராம் மாத்திரம் விற்பனை செய்யப்பட்டிருந்தது. | இந்த பசளை விற்பனை செய்ய முடியாததனால் பிரதி ஆணையாளரின் எழுத்து மூலம் ஆலோசனை கோரியுள்ளதென. | இருப்பு தேவைபாட்டை சரியாக முகாமைத்துவத்துவம் செய்ய வேண்டியதுடன் முறையான வேலைத்திட்டமொன்றை பயன்படுத்தி பசளை இருப்பை விற்பனை செய்ய வேண்டும். |
| (ஏ) | கோன்கஹவெல மற்றும் லக்கல பல்லேகம கமநல சேவை செயற்குழுக்களில் மீளாய்வாண்டில் நிவாரண பசளை விற்பனை ரூபா 2,597,147 தொகையும் உள்ளடங்களாக மொத்த தொகை ரூபா 265,947 மீளாய்வாண்டு இறுதியளவில் கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரிற்கு செலுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதென. | நிவாரண பசளை தொகையை பிரதி ஆணையாளரிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு செய்யாத உத்தியோகத்தரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | பலாபத்வல கமநல சேவை செயற்குழுவிற்கு சொந்தமான 03 வகை 29 உருப்படிகளின் பெறுமதி ரூபா 451,800 ஆன பொருட்கள் கடந்த ஆண்டிலிருந்து விற்பனை செய்யப்படாது களஞ்சியத்தில் எஞ்சியிருந்ததுடன் செயற்குழுவினால் போதியளவான இருப்பு முகாமைத்துவத்தை மேற்கொண்டிருக்கவில்லை. | விவசாயிகளின் தேவைப்பாட்டின் மீது கொள்வனவு செய்துள்ளதுடன் தற்போதும் விற்பனை செய்யப்படுவதென. | இருப்பு தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டு முகாமைத்துவம் செய்ய வேண்டியதுடன் விரைவில் செயற்திட்டம் ஒன்றை செயற்படுத்தி பண்டங்களை விற்க வெண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | வாலவெல மற்றும் வேரகல கமநல சேவை செயற்குழுக்களில் 328 குடும்பங்கள் நலன்பெறும் 178 ஏக்கர் வயல்கள் மேவுகை செய்யப்படும் 16 சிறிய நீர்பாசனங்களை மறுசீரமைக்க வேண்டுவென இனங்கண்டிருந்த போதும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வேரகல கமநல சேவை செயற்குழுவில் 03 சிறிய நீர்பாசனத்திற்காக நிதிஏற்பாடு கிடைத்ததுடன் வாலவெல கமநல சேவை செயற்குழுவிற்கு 2025 ஆண்டில் நிதிஏற்பாட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | முறையான திட்டத்தின் கீழ் நிதிஏற்பாட்டை பெற்ற நீர்பாசனத்தை உரியவாறு பராமரிக்க வேண்டும். |

**3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தம்புள்ள கமநல சேவை செயற்குழுவில் மீளாய்வாண்டு ஒக்டோபர் 14 திகதி ஸ்கேனர் மற்றும் DOT மெட்ரிக்ஸ் பிரின்டரை கொள்வனவு செய்ய ரூபா 98,677 தொகை செலவிட்டிருந்ததுடன் 2025 ஏப்ரல் 28 திகதி வரை ஸ்கேனர் இயந்திரத்தை பயன்பாட்டிற்கு எடுத்திருக்கவில்லை. | மென்பொருள் கிடைத்த பின்னர் பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதென. | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்த வேண்டியதுடன் தேவைப்பாட்டின் பிரகாரம் மாத்திரம் பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டும். |
| (ஆ) | ஹெட்டிபொல கமநல சேவை செயற்குழுவிற்குரிய விற்பனை நிலையம் 2019 ஆண்டு முதல் விளைவற்று காணப்பட்டது. | போதிய அலுவலர்கள் இல்லாததால் திறந்து வைத்து பேணிச் செல்ல முடியாதென. | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்த வேலைத்திட்டம் ஒன்றை செயற்படுத்த வேண்டும். |

**4. கமநல வங்கி**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 12 கமநல சேவை செயற்குழுக்களில் பொது வைப்பு கணக்குகள், பெறமக வைப்புகள், சிறிய குழுக்கள், விவசாய அமைப்பு மற்றும் மகளிர் விவசாய அமைப்புக் கணக்குகள் முறையே 25880 உம் 2785 உம் 208 உம் 81 உம் மற்றும் 141 உம் காணப்பட்டதுடன் முறையே அவற்றின் கணக்குகள் 10760 உம் 1180 உம் 82 உம் 22 உம் மற்றும் | பிரிவு மட்டத்தில் கணக்கு உரிமையாளர்களை இனங்கண்டு கணக்குகளை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | சேமிப்புக்களை வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அது தொடர்பாக பிரிவுகளில் அலுவலர்களினது செயற்பாட்டை அதிகரிக்க முறைமையொன்றை தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 41 உம் ஆரம்ப வைப்பு தொகைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | விவசாய மக்களின் நிதி வலுவை வளர்த்துக்கொள்வது தொடர்பாக கடன் வழங்கும் செயன்முறையை செயற்திறனாக பேணிச்செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 10 கமநல வங்கிகளில் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி அலுவலர் 244 பிரிவுகள்ற்கிடையில் 96 பிரிவுகளிற்காக எவ்வித பயிர்செய்கை கடனையும் விநியோகித்திருக்கவில்லை. | கடன் விநியோகிக்காத பிரிவுகளிற்கும் கடன் விநியோகிக்க குறித்துக் கொள்ளப்பட்டதென. | பொருளாதார நலன்களை விவசாய மக்களிற்கு பெற்றுக்கொடுக்கும் நோக்கில் கடன் வழங்கும் செயன்முறையை செயற்திறனாக பேணிச்செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கமநல வங்கிகள் மென்பொருளை கொள்வனவு செய்வதற்காக 10 கமநல சேவை செயற்குழுக்களினால் கடந்த ஆண்டு ரூபா 3,075,411 தொகை செலுத்தி இருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரை அந்த மென்பொருளை இஸ்தாபித்து இருக்காததனால் 12 Dot Matrix Pass Book அச்சுப் பொறிகளும் 12 Scanner உம் 07 Dot Matrix அச்சுப் பொறிகளும் ஒரு Desktop கணனியும் மற்றும் 05 அச்சுப் பொறிகளும் விளைவற்று காணப்பட்டன. | பிரதான அலுவலகத்தினால் மென்பொருளொன்றை தயாரிக்கும் நோக்கில் உபகரணங்களை கொள்வனவு செய்ய ஆலோசனை வழங்கிய போதும் இது வரை மென்பெருளை அறிமுகப்படுத்தி இல்லையென. | கமநல அபிவிருத்தி திணைக்களம் மற்றும் கூட்டிணைந்து மென்பொருளை இஸ்தாபிக்க நடவடிக்கையை விரைவுபடுத்த வேண்டும். |
| (ஈ) | 07 கமநல சேவை செயற்குழுக்களில் அனர்த்த சேமிப்பு கணக்கிற்கு கிடைத்த வட்டி ரூபா 18,038 தொகையும் அனர்த்த நிலையான வைப்பிற்காக கிடைத்த வட்டி ரூபா 346,562 தொகையுமாக கூட்டுத்தொகை ரூபா 364,600 தொகை அனர்த்த நிதியத்திற்கு செலவு வைத்திருக்காததுடன், நுண்பாக நிதி நிலையான வைப்பிற்காக கிடைத்த ரூபா 455,184 தொகை மற்றும் நுண்பாக நிதி சேமிப்பு கணக்கிற்கு கிடைத்த வட்டி ரூபா 1,880 தொகையுமாக கூட்டுத்தொகை ரூபா 457,064 தொகையை நுண்பாக நிதியத்திற்கு செலவு வைக்காது | சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | முறையானவாறு நடவடிக்கை எடுத்து குறித்த பெறுவனவை சரியான கணக்குகளிற்கு செலவு வைக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்த அனைத்து பெறுவனவுகளும் கமநல வங்கியில் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருநத்து. | | |
| (உ) | 1999 ஆண்டு முதல் 2024 வரை 20 கமநல சேவை செயற்குழுக்களில் 2022 நபர்களிற்கு விநியோகிக்கப்பட்ட 05 வகையான நிலுவை கடன் மீதி ரூபா 95,992,057 தொகையை மீளாய்வாண்டு இறுதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 239 நபர்களிற்கு விநியோகிக்கப்பட்ட ரூபா 13,811,158 தொகையான இந்த கடன் தொகையிலிருந்து ஒரு தவணையையேனும் அறவிட்டிருக்கவில்லை. | இறுதி கட்டளை, நியாய சபை மற்றும் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு கடன் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதெென. | முறையான பரீட்ச்சிப்பை நடாத்தி கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த மற்றும் நிலுவை கடன் அறவிட நடவடிக்கை எடுக்காத அலுவலர்களுக்கு முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | தம்புள்ள கமநல சேவை செயற்குழுவினால் இலங்கை வெங்காயம் கம்பனியொன்றிற்கு 2001 ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 1,000,000 ஆன கடன் தொகையிலிருந்து எவ்வித தவணையையும் அறவிட்டிருக்காததுடன் மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய வட்டி ரூபா 1,743,698 ஆக இருந்தது. | நியாய சபை பரீட்சிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென. | முறையான நடவடிக்கை எடுத்து குறித்த கடன் மீதியை அறவிடுவதற்கும், கடன் அறவிடும் செயன்முறையை செயற்திறனாக பேணிச்செல்லவும் வேண்டும். |
| (எ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2024 செப்டம்பர் 19 ஆம் திகதிய 7/12/4/1 ஆம் இலக்க கடிதத்தின் 2.1.1 பந்தியின் பிரகாரம் 2024 ஒக்டோபர் 01 ஆம் திகதிக்கு வயது 18 ஆண்டுகள் பூர்த்தியான கணக்கு உரிமையாளர்களினது பெரமக சிறுவர் சேமிப்பு கணக்குகள் தொடர்பாக தேவையான அறிவுறுத்தல் செய்து பொதுவான வைப்பு கணக்குகளாக மாற்றப்பட வேண்டிய போதும் பல்லேபொல, கிம்பிஸ்ஸ மற்றும் ஹெட்டிபொல கமநல சேவை செயற்குழு வங்கிகளில் 73 வைப்பாளர்களினது பெரமக சிறுவர் வைப்பு கணக்குகள் பொதுவான வைப்பு கணக்குகளாக மாற்றப்பட்டிருக்கவில்லை. | வயது 18 ஆண்டுகளை விஞ்சிய வைப்பாளர்களினது பெரமக சிறுவர் வைப்புக்களை பொதுவான வைப்பாக மாற்றுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுத்து கணக்குகள் மாற்றத்தை விரைவில் செய்ய வேண்டியதுடன் அவற்றை செய்யாத அலுவலர்களிற்கு நடவடிக்கை எடுக்க வேேடும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | கோன்கஹவெல கமநல சேவை செயற்குழுவில் முன்னால் விவசாய மற்றும் ஆராய்ச்சி உற்பத்தி உதவி அலுவலர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட நிதி முறைகேடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் 2019 ஆண்டின் போது ரூபா 778,310 தொகை அறவிட தீர்மானித்து, அந்த ஆண்டு முதல் 2022 வரை காலத்தினுள் ரூபா 345,000 ஆன தொகை அறவிட்டு எவ்வித காரணங்களும் குறிப்பிடப்படாது ரூபா 433,310 ஆன தொகை அறவிடுவது இடைநிறுத்தப்பட்டிருந்தது. | பிரதி ஆணையாளரிற்கு இது தொடர்பான தகவல்களை சமர்ப்பித்துள்ளதென. | விசாரணையின் பரிந்துரை மீது குறித்த அறவிடல் மேற்கொள்ள வேண்டியதாகவும் அறவிடல் இடைநிறுத்தப்பட்ட தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதனை மேற்கொள்ள வேண்டும். |
| (ஐ) | கோன்கஹவெல கமநல சேவை செயற்குழுவில் 2000 ஆண்டு முதல் 2006 ஆண்டுகளில் கமநல வங்கியினால் கடன் வழங்கும் போது ஒரு போகத்தில் நிலுவை கடன் இருந்த போதும் அதற்கு பின்னரான போகத்திற்கும் ஓரே விவசாயியிற்கு கடன் விநியோகிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் நிலவியதுடன் நிலுவை கடன் காணப்படும் அவ்வாறான விவசாயிகள் 09 பேர்களிடமிருந்து ரூபா 126,479 தொகையான நிலுவை கடன் தொகை மற்றும் ரூபா 130,526 தொகையான நிலுவை கடன் வட்டியாக கூட்டுத்தொகை ரூபா 257,005 கடன் அறவிடுவதற்காக காணப்பட்டது. | பிரிவுபொறுப்பான அலுவலர் மற்றும் கமநல வங்கி ஆளணியினரை அறிவுறுத்தி பேரேடுகளை உரியவாறு பரீட்ச்சித்து கடன் செலுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துக்கொண்டு முன் செயற்பாடு எடுக்க நடவடிக்கை எடுப்பதென. | முறையற்றவாறு கடன் வழங்குதல் மற்றும் காலரீதியாக நிலுவை கடனை அறவிட முயற்ச்சி எடுக்காத அலுவலர்களிற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் கடன் மீதியை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | கோன்கஹவெல கமநல சேவை செயற்குழுவில் 2000 ஆண்டு முதல் 2006 கால எல்லையினுள் கடன் விநியோகிக்கப்பட்ட உடன்படிக்கை பரீட்ச்சிப்பின் போது அவற்றின் 12 இல் கடன் தொகையை குறிப்பிட்டிருக்காததுடன் 04 உடன்படிக்கைகள் கமநல சேவை செயற்குழுவின் நிறைவேற்று செயலாளரால் கையொப்பம் இடப்படடிருக்கவில்லை. இவ்வாறான பூரணமற்ற உடன்படிக்கைகளிற்குரியதாக விவசாயிகள் 07 பேர்கள் தொடர்பாக ரூபா 76,940 | திட்டவட்டமான பதில் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான கடன் தொகையொன்று மற்றும் ரூபா 77,613 தொகையான வட்டியுமாக கூட்டுத்தொகை ரூபா 154,553 ஆன தொகை அறவிடப்பட இருந்தது. | | |
| (ஓ) | கோன்கஹவெல கமநல சேவை செயற்குழுவில் 2023 மே மாதம் 07 ஆம் திகதி விவசாய மற்றும் ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் ஒருவர் பொறுபேற்ற அடியிதழ் புத்தகங்கள் இது வரை கமநல சேவை செயற்குழுவிற்கு மீள் அளிக்கப்படடிருக்காதமைக்கு கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரின் 2024 நவம்பர் 18 ஆம் திகதிய மற்றும் இலக்கம் 5/5/3/1/11 கொண்ட கடிதம் மூலம் அந்த அலுவலரை அறிவூட்ப்பட்டிருந்தது. அவ்வாறே பட்டியலொன்றை விவசாயி ஒருவரினால் நியாய சபைக்கு சமர்ப்பித்ததன் காரணத்தால் இந்த கமநல வங்கிக்குரியதான பணம் சேகரிக்கப்பட்ட பில் புத்தகமொன்றும் காணாமல் போய் உள்ளதாக மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் குறித்த காலத்தினுள் சேவையில் ஈடுப்பட்டிருந்த அலுவலர் தொடர்பாக நடைபெறும் புலனாய்வு 2025 மே 30 திகதி வரையும் முடிவுறுத்தப்பட்டு இருக்கவில்லை. | பிரதி ஆணையாளரிற்கு தகவல்களை சமர்ப்பித்துள்ளதென. | புலனாய்வினை விரைவில் முடிவுறுத்தி பொறுப்புவாய்ந்த தரப்பினரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |